**IN THE COURT OF ADDITIONAL DISTRICT JUDGE,**

**TENKASI.**

| | |
|---|---|
| **Date** | : **25.02.2026** |
| **MCOP No.** | : **178/2021** |
| **Rw** | : **2** |
| **Name** | : **திரு. ராஜேஷ்** |

சாட்சி இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்குவிசாரணை செய்ய அனுமதிக்கப்படுகின்றார்.

**மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை**

1) கடந்த 10 வருடங்களாக மத்திய அரசாங்கத்தால் வாகன் என்ற இணையதளம் செயல்பட்டு வருகிறது என்று சொன்னால் சரியல்ல, கடந்த 2 ஆண்டுகளாகத்தான் அது செயல்பாட்டில் உள்ளது. மேற்படி இணையதளம் பொதுமக்களால் வாகனங்கள் குறித்த விவரங்களை அறிந்துகொள்ள பயன்படுத்தப்பட்டு வருகிறது என்றால் சரிதான். இந்தியாவில் உள்ள எந்த வாகன பதிவெண்ணை குறிப்பிட்டாலும் அதன் விவரங்கள் அந்த இணையதளத்தில் தெரிந்துவிடும் என்றால் சரிதான். காப்பீட்டு நிறுவனங்களும் மேற்படி இணையதளத்தில் குறிப்பிட்ட வாகனத்தின் உரிமையாளர் யார், அது என்ன வகையான வாகனம் என்பது குறித்த விவரங்களை தெரிந்துகொள்ள முடியும் என்றால் சரிதான். வாகனத்தின் காப்பீடு குறித்த விவரங்களையும் அதில் தெரிந்துகொள்ள முடியும் என்றால் சரிதான். எங்கள் நிறுவனம் இந்தியாவில் சுமார் 16 வருடங்களாக காப்பீட்டு துறையில் உள்ளது. எங்கள் நிறுவனம் ஒரு பெரிய காப்பீட்டு நிறுவனம் என்றால் சரிதான். எங்கள் நிறுவனத்தால் மேற்படி இணையதளத்தை பயன்படுத்தி எந்தவொரு வாகனத்தை பற்றிய விவரங்களையும் தெரிந்துகொள்ள முடியும் என்றால் 2 வருடங்களுக்கு முன்பு

வரை அவ்வாறு செய்யமுடியும், தற்போது உரிமையாளரின் மொபைல் எண் உதவி இருந்தால் மட்டுமே அந்த விவரங்கள் தெரியும்.

2) இந்த வழக்கு சம்பந்தமான அனைத்து ஆவணங்களையும் நான் இன்று நீதிமன்றம் கொண்டுவந்துள்ளேன் என்றால் சரிதான். எங்கள் நிறுவனத்தால் TN–74–D–7832 பதிவெண் கொண்ட வாகனத்திற்கு எந்த கிளையில் காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்றால் அது Policy Bazaar என்ற Online site மூலமாக வழங்கப்பட்டுள்ளது. Policy Bazaar என்பது எங்கள் நிறுவனத்துடன் மட்டும் தொடர்பு கொண்டது அல்ல, அதில் பல்வேறு காப்பீட்டு நிறுவனங்களின் சேவைகளை பெறமுடியும். Policy Bazaar இணையதளம் காப்பீட்டை வழங்க முடியாது என்று சொன்னால் சரிதான். இந்த வழக்கின் சம்பந்தப்பட்ட TN–74–D–7832 பதிவெண் கொண்ட வாகனத்திற்கு எந்த தேதியில் எப்போது காப்பீடு வழங்கப்பட்டது என்றால் எங்கள் இணையதளம் மூலமாக 22.01.2021 முதல் 21.01.2022 வரை TVS XL என்ற இருசக்கர வாகனத்திற்கு காப்பீடு வழங்கப்பட்டுள்ளது. TN–74–D–7832 பதிவெண் கொண்ட Maxi Cab வாகனத்திற்குத்தான் எங்கள் நிறுவனத்தால் காப்பீடு வழங்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல.

3) எங்கள் நிறுவனத்தின் சார்பில் எதிருரை தாக்கல் செய்த அதிகாரியின் பெயர் மற்றும் விவரம் எனக்கு தெரியாது. புதியதாக எங்கள் நிறுவனத்தில் காப்பீடு செய்யும் வாகனத்திற்கு, வாகனத்தின் பதிவு சான்று போன்ற ஆவணங்களை சமர்ப்பிக்கவேண்டும். ஆன்லைனில் காப்பீடு செய்யும் வாகனத்திற்கு மேற்படி ஆவணங்கள் எதுவும் தேவை கிடையாது. பொதுவாக ஒரு வாகனத்தை காப்பீடு செய்யவேண்டும் எனில் அதற்கு ஒரு Proposal Form சமர்ப்பிக்கப்படும் என்றால் நேரடியாக வரும் நபர்கள் அவ்வாறு சமர்ப்பிக்க வேண்டும். ம.சா.ஆ.1 ஆவணத்தில் TN–74–D–7832 பதிவெண் கொண்ட வாகனத்திற்கு Proposal Form கொடுத்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

4) இழப்பீடு கோரி மனுதாரர்கள் தாக்கல் செய்த மனு குறித்த விவரம் எங்கள் நிறுவனத்திற்கு எப்போது தெரியவந்தது என்றால் 15.09.2021 அன்று தெரியவந்தது. அதனை தொடர்ந்து எங்கள் நிறுவனத்தின் களப்பணியாளரால் கள ஆய்வு செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த களப்பணியாளரின் பெயர் திரு.கண்ணன், அவரது முகவரி என்னவென்றால் கதவு எண். 6, அழகர் நகர், 5 வது தெரு, கே.புதூர், மதுரை ஆகும். அவர் எப்போது களப்பணி அறிக்கையை எங்கள் நிறுவனத்தில் தாக்கல் செய்தார் என்றால் 05.02.2022 அன்று தாக்கல் செய்தார். நீதிமன்றத்திலிருந்து எங்கள் நிறுவனத்திற்கு சம்மன் வந்தவுடன் வாகனம் சம்பந்தப்பட்ட பாலிசி காப்பியை நாங்கள் பரிசீலித்தோம் என்றால் சரிதான். எங்கள் நிறுவனத்தில் எடுக்கப்பட்ட பாலிசியானது 21.01.2022 அன்று முடிவுக்கு வருகிறது. மேற்படி பாலிசியை ரத்து செய்து எங்கள் நிறுவனத்திலிருந்து அறிவிப்பு அனுப்பப்பட்டதா என்றால் 09.02.2022 அன்று அனுப்பப்பட்டுள்ளது. எனவே 21.01.2022 வரை மேற்படி பாலிசியை ரத்து செய்ய எங்கள் நிறுவனம் எந்த முயற்சியும் எடுக்கவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள காப்பீட்டு நகல் உண்மையானது அல்ல என்றால் சரியல்ல.

5) Policy Bazzar ல் கொடுக்கப்படம் தகவல்கள் சரியானதா என்பதை சரிபார்க்கவேண்டிய பொறுப்பு எங்கள் நிறுவனத்தை சேர்ந்தது என்றால் அந்த தகவல்கள் Policy Bazzar ல் கொடுக்கப்படும் தகவல்கள் கிடையாது, வாகனத்தின் உரிமையாளரால் Policy Bazzar இணையதளத்தின் மூலம் எங்களுக்கு கொடுக்கப்படும் தகவல்கள் ஆகும். அவ்வாறு எங்களுக்கு கிடைக்கப்பெறும் தகவல்களை நாங்கள் சரிபார்க்கவேண்டும் என்று சொன்னால் ஆன்லைனில் காப்பீடு கோரி விண்ணப்பிப்பதால் அதை சரிபார்க்கவேண்டியது கிடையாது. ஆன்லைனில் காப்பீடு கோரி விண்ணப்பித்தாலும் அதை சரிபார்க்கவேண்டிய கடமை எங்களுக்கு உள்ளது என்றும், நான் வழக்கிற்காக தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

6) எங்களுக்கு திருநெல்வேலியில் ஒரு கிளை உள்ளது என்றால் சரிதான். சிந்தாமணி என்ற ஒரு வழக்கறிஞர் காப்பீடு விவரங்கள் கோரி ஒரு அறிவிப்பு அனுப்பியிருந்தார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அந்த அறிவிப்பு தற்போது நான் கொண்டுவந்துள்ள கோப்புகளில் இல்லை. அதனை எங்கள் நிறுவனத்தில் தேடிப்பார்த்து கொண்டு வர எனக்கு ஒருவார கால அவகாசம் தேவைப்படும்.

**( குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது)**

MANOJKUMAR S

Digitally signed by MANOJKUMAR S
Location: Additional District and Sessions Judge, Tenkasi